**சுருக்கம்**

மோட்டார் வாகனம் – முதலுதவிக்கான பயிற்சி அளித்து முதலுதவிச் சான்று வழங்க அனுமதி அளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**உள் (போக்குவரத்து -5) துறை**

**அரசாணை (நிலை) எண்.300** **நாள்: 21.06.2022**

**சுப கிருது ஆணி 07-ம் நாள்**

**திருவள்ளுவர் ஆண்டு -2053**

**படிக்க:-**

போக்குவரத்து ஆணையர், போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரகம், சென்னை -5, அவர்களின் கடித எண்.42498/HB1/2021, நாள் 19.01.2022.

******

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட போக்குவரத்து ஆணையர் அவர்கள் தனது கடிதத்தில் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு உயர் திறன் மேம்பாட்டு மையம் சுகாதாரநலன், சென்னை அவர்கள் தனது கடிதத்தில் நடத்துனர் உரிமம் பெறுபவர்கள் மற்றும் ஓட்டுநர் உரிமத்தில் பொதுப்பணிவில்லை (Badge) பெறுபவர்களுக்கு முதலுதவிக்கான பயிற்சி அளித்து முதலுதவிச் சான்றிதழ் வழங்க அனுமதி வழங்குமாறு கோரியுள்ளதாக தெரிவித்துள்ளார் என்றும் இப்பயிற்சிக்கு செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்களின் 20.12.2021-ம் நாளிடப்பட்ட கடிதத்தில் பரிந்துரை செய்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

2. மேலும், போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையர் அவர்கள் தனது கடிதத்தில் தமிழ்நாட்டில் தற்போது செயின்ட் ஜான் ஆம்புலன்ஸ் நிறுவனம், சென்னை என்ற ஒரு நிறுவனம் மட்டுமே நடத்துநர்களுக்கு முதலுதவி பயிற்சி அளித்து முதலுதவிச்சான்று வழங்கப்பட்டு வருகிறது என்றும், மேலும், பொது மக்கள் முதலுதவி சான்று பெற இந்த நிறுவனத்தை அணுகும்போதெல்லாம் பூட்டிய நிலையில்

உள்ளதாக புகார்கள் வந்த வண்ணம் உள்ளது, என்றும் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து தாலுக்காவிலும் இவர்களின் கிளைகள் இயங்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளதுடன் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு உயர் திறன் மேம்பாட்டு மையம் சுகாதாரநலன், சென்னை அவர்கள் கீழ்கண்ட இரண்டு வகையான பயிற்சிகளை அளிக்க திட்டமிட்டுள்ளதாக அதன் விவரங்களுடன் தெரிவித்துள்ளார்:-

1. Basic Course -1 நாள் (8 மணி நேரம்) – பயிற்சி கட்டணம் ரூ.500/-+GST 18%
2. Advanced Course - 4 நாட்கள் (24 மணிநேரம்) – பயிற்சி கட்டணம் ரூ.2000/-+GST 18%

3. நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு உயர் திறன் மேம்பாட்டு மையம் சுகாதாரநலன், சென்னை அவர்களுக்கு நடத்துனர் உரிமம் பெறுபவர்கள் மற்றும் ஓட்டுநர் உரிமத்தில் பொதுப்பணிவில்லை (Badge) மேற்குறிப்பு பெறுபவர்களுக்கு இப்பயிற்சி அளிக்க அனுமதி வழங்குமாறு போக்குவரத்து ஆணையர் அவர்கள் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. போக்குவரத்து ஆணையர் அவர்களின், பரிந்துரையினை ஏற்று நடத்துனர் உரிமம் மற்றும் பொதுப் பணிவில்லை (Badge) மேற்குறிப்பு விண்ணப்பிப்பவர்களுக்கு முதலுதவி பயிற்சி அளித்து உரிய சான்று வழங்க நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையம் சுகாதார நலன் அவர்களுக்கு அனுமதி வழங்கலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**கே.பனீந்திர ரெட்டி**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

<u>பெறுநர்</u>

போக்குவரத்து ஆணையர், போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரகம், சென்னை-5.

நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு உயர் திறன் மேம்பாட்டு மையம் சுகாதார நலன், A-28, டேன்சி பில்டிங், முதல் மாடி, திரு வி க இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை-32.

தலைமை மாநில கணக்காயர், சென்னை-18.
மாநில கணக்காயர், சென்னை-18.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை-35.
அனைத்து வட்டார போக்குவரத்து அலுவலர்கள்.

**நகல்**

செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை,
தலைமைச்செயலகம், சென்னை-9.
இருப்புக்கோப்பு/உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**